**செய்தி வெளியீடு எண்: 475** **நாள்: 23.07.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று (23.7.2018) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந. நடராஜன் அவர்கள், மத்திய சுற்றுலாத்துறை 2017–ஆம் ஆண்டில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற்றதை அறிவித்து வழங்கிய கடிதத்தினை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலை வாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துதல், தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால், சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

உலகின் பழமையான கலாச்சாரம், வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச்சின்னங்கள், பிரமிக்கத்தக்க கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை, மனதை வசீகரிக்கும் இயற்கைத் தோற்றங்கள், வனப்பகுதிகள் மற்றும் யுனெஸ்கோ (UNESCO) அறிவித்துள்ள உலக பாரம்பரியச் சின்னங்கள் முதலியவை தமிழ்நாட்டில் உள்ளன. சிறந்த சாலை வசதிகள் மற்றும் நான்கு பன்னாட்டு விமான நிலையங்கள் இங்கு அமைந்துள்ளன. இதன் காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் கவர்வதில் தமிழ்நாடு தொடர்ந்து தனிச் சிறப்புடன் திகழ்ந்து வருகிறது.

இத்தகைய சுற்றுலாச் சிறப்புகளைக் கொண்ட தமிழ்நாடு, கடந்த 2017–ஆம் ஆண்டில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவிலேயே முதலிடத்தை பெற்றுள்ளது என்று மத்திய அரசின் சுற்றுலாத் துறை அறிவித்துள்ளது. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 2013–ஆம் ஆண்டு முதல்

2017–ஆம் ஆண்டு வரை, தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாகவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 2014–ஆம் ஆண்டு முதல் 2017–ஆம் ஆண்டு வரை, தொடர்ந்து நான்கு ஆண்டுகளாகவும் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தை பெற்று வந்துள்ளது. மேலும், 2017–ஆம் ஆண்டில் 34 கோடியே 50 லட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 48 லட்சத்து 60 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து சென்றுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அபூர்வ வர்மா, இ.ஆ.ப., சுற்றுலா ஆணையர் திரு.வெ. பழனிக்குமார், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 23.7.2018**